**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 28/2025**

**பி.வா.சா.2 – நாசர் அலி**

**<u>16–02–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து எங்கள் குடும்பத்திற்கு எப்படி வந்தது என்றால் எனது அம்மா பாத்திமா பீவியின் சொத்து. எனது அம்மா சொத்து என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் குடியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் நான் வீடு கட்டியதாக சொல்வதற்கு கட்டிட அனுமதி அல்லது அது குறித்து வேறு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் தனிப்பட்ட முறையில் செலவு செய்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சகோதரிகளுக்கு திருமணமாவதற்கு முன்பு எனது பெற்றோர்களுடன் ஒரே குடித்தனமாக இருந்தோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள். தற்போது நான் தனியாக உள்ளேன்.

2. நான் எனது குடும்பத்தில் இரண்டாவது நபர். எனது சகோதரிகளுக்கு எப்போது திருமணமானது என்றால் சம்சாம்பேகத்திற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பும், மும்தான் பேகத்திற்கு 30 ஆண்டுகளுக்கு முன்பும், சிராஜுனிசாவிற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பும், மேகராஜ் பேகத்திற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பும், 20 ஆண்டுகளுக்கும் முன்பு சாதிக் அலிக்கும், 12 ஆண்டுக்கும் முன்பு ஐசம்மாவுக்கும் திருமணம் செய்து வைத்தேன். திருமணம் செய்து வைத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். யார் யாருக்கு எவ்வளவு செலவு செய்தேன் என்பதை நான் குறிப்பிட்டு எனது முதல் விசாரணையில்

சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இருக்கும் வீட்டில் வாதி பிரதிவாதிகள் அனைவரும் கூட்டுசுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்றால் எனது சகோதரர் சகோதரிகள் அனைவரும் நானே திருமணம் செய்துவைத்ததால் வீடு எனக்கே சொந்தம் என்று வாய்மொழியாக கூறினார்கள். வாய்மொழியாக வீட்டை விட்டுகொடுத்தாக நான் சொல்வதற்கு எவ்வித சாட்சியமும் இல்லை என்றால் சாட்சி உள்ளது.

3. யார் சாட்சி என்றால் எனது அப்பா, மாமனார் இறந்துவிட்டார்கள். எனது மைத்துனர் ஆதம் மட்டும் உள்ளார். நான் சொல்வதுபோல் வாய்மொழி விடுதலை எதுவும் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது எனது வீட்டின் சொத்துவரி ரசீதுகள் என்றால் சரிதான். **சம்சத்பேகம் பெயரில் உள்ள சொத்துவரி ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எங்கள் நால்வர் பெயரிலும் சொத்து வரி இருந்தது. முதல் பெயராக சம்சாத்பேகம் பெயர் இருந்ததால் அவரது பெயர் அதில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வீட்டு வரி ரசீதுகளில் சம்சம்பேகம், நாசர் அலி, சிராஜுனிசா பெயர் உள்ளது என்றால் சரிதான். **வீட்டு வரி ரிசீதுகள் அசல் வா.சா.ஆ.7 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் குடிநீர் ரசீதுகள் சம்சத்பேகம், நாசர் அலி, சிராஜுனிசா பெயர் உள்ளது என்றால் சரிதான். அவை எனது அம்மா பெயருக்கு சொத்து எழுதுவதற்கு முன்பு வழங்கப்பட்டவை, நாங்கள் தான் எனது அம்மா பெயருக்கு சொத்தை எழுதிவைத்தோம், **குடிநீர் வரி ரசீது அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டது.**

4. தாவா சொத்து அனைவரின் கூட்டு சுவாதினத்தில் தான் இருந்து வந்தது என்றும், அதனால் தான் ஆதார் அட்டை, வரி ரசீதுகள் அனைத்தும் வாதி பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, 15 ஆண்டுகளாக நான் தான்

இருந்து வருகிறேன். நான் தான் பராமரித்து எனது பெற்றோர்களை பார்தேன். எனது சுவாதீனத்திற்கான Gas Book, குடும்ப அட்டையை போட்டுள்ளேன். பொற்றோர்களை பராமரித்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகள் இருவரும் தான் பெற்றோர்களை பராமரித்தார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, அவர்கள் அனைவரும் திருமணமாகி சென்றுவிட்டார்கள். வாதிக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளது என்பதால் தாவா படி தீர்ப்பாகவேண்டும் என்றால் வாய்மொழியாக சொத்து எனக்கு தான் என்று வாக்குறுதி கொடுத்தார்கள், தற்போது மாற்றி பேசுகிறார்கள்.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்க்கொள்ளப்பட்டு மேலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது</u>**

1. 1 முதல் 5 பிரதிவாதிகள் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்ப்படும் வாக்காலர் அடையாள அட்டையில் உள்ள முகவரியும், தாவா சொத்தில் உள்ள முகவரியும் ஒன்றுதான் என்றால் அது பழைய வாக்காலர் அடையாள அட்டை. திருமணத்திற்கு முன்பு அனைவரும் ஒன்றாகதான் இருந்தோம்.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.16 12:59:41 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.